# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 90/2020 நாள்.26.02.2026

DW1- திருமதி.மீனாட்சி , க/பெ. திரு.கோவிந்தசாமி

வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

வாதியின் தகப்பனாருக்கும் எனக்கும் முறைப்படி திருமணம் நடந்தது என்றால் ஆமாம். வாதியின் தகப்பனாருக்கு நான் 2வது மனைவி என்றால் ஆமாம். 1வது மனைவி தனலெட்சுமி, 2வது மனைவி அன்புசாராஎன்றால் அது எனக்கு தெரியாது. வாதியின் தகப்பனார் எப்படி இறந்தார் என்றால் நடைபயிற்சி செல்லும்போது விபத்தாகி இறந்துவிட்டார். வாதியின் தகப்பனார் கோவிந்தசாமி எனக்கு எதிராக விவகாரத்து வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் ஆமாம். வழக்குரிய தாவா சொத்தை அவருடைய மகள்களுக்கு செட்டில்மெண்ட் எழுதிகொடுத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. வாதியின் தகப்பனார் உயிருடன் இருக்கும்போது எனக்கு எதிராக 10 முறை தஞ்சாவூர் கிழக்கு காவல்நிலையத்தில் புகார் கொடுக்கபட்டுள்ளது என்றால் நானும் புகார் கொடுத்துள்ளேன். அவர் பாரத் சஞ்சார் நிகாம் நிறுவனத்தில் வேலை பார்த்த சம்பளத்தில் சொத்து வாங்கபட்டது என்றால் இல்லை. எனக்கும் வாதியின் தகப்பனாருக்கும் எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் 15.3.2015. வழக்குரிய தாவா சொத்து 2000 ஆண்டில் வாதியின் தகப்பனார் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் ஆமாம். 1.10.2018 அன்று வாதி இருவருக்கும் அவரது தகப்பனார் செட்டில்மெண்ட் ஆவணம் எந்த துன்புறுத்தலும் இல்லாமல் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. வாதியின் தகப்பனாருக்கும் எனக்கும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1இல் ஜீவானாம்சம் கோரி மனுதாக்கல் செய்தேன் என்றால் ஆமாம் அதோடு என்னோடு பணம் நகையை கேட்டும் வழக்கு போட்டிருந்தேன். வா.சா.ஆ.17 இல் தஞ்சாவூர் கிழக்கு காவல்நிலையத்தில் நான் கொடுத்த புகார் பொய்யானவை என்று இறுதியறிக்கை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. இரு வாதிகளும் படித்து கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. பெரியபெண்ணுக்கு கல்யாணமாகி 12வருடம், சின்ன பொண்ணுக்கு கல்யாணத்திற்கு தேதி வைக்கப்பட்டிருந்தது. தஞ்சாவூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் கோவிந்தசாமி வாரிசுஎன்று வாதிகள் இருவரும் மற்றும்

பிரதிவாதியாகிய நான் ஆகியோர் என்று முடிவாகியுள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்து வாதிகளுக்குரிய பாத்தியபட்ட சொத்து என்றும் நான் அவர்களிடம் சுவாதீனம் கொடுக்க கடமைபட்டவர் என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.26 18:40:38 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**